**செய்தி வெளியீடு எண்: 818** **நாள்: 06.12.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

## சொத்துக்களின் சந்தை மதிப்பு வழிகாட்டி வருவாய் கிராமவாரியாக பதிவுத்துறை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து சொத்துக்களுக்கும் சந்தை மதிப்பு வழிகாட்டி நிர்ணயம் செய்திடும் பொருட்டு, மாவட்டந்தோறும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பீட்டுத் துணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு சந்தை மதிப்பு வழிகாட்டி புல எண்கள்வாரியாக அல்லது தெருக்களின் வாரியாக தயாரிக்கப்பட்டு, பதிவுத்துறை இணையதளத்தில் (www.tnreginet.net) வெளியிடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பதிவுத்துறை இணையதளத்தில் சம்பந்தப்பட்ட பதிவு மண்டலம், சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் வருவாய் கிராமம் ஆகியற்றை தெரிவு செய்து பின்னர் தேவைப்படும் குறிப்பிட்ட தெரு அல்லது புல எண்ணிற்குரிய சந்தை மதிப்பு வழிகாட்டியினை தெரிந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள, இத்திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வருவாய் கிராமத்தின் அனைத்து புல எண்கள் மற்றும் அனைத்து தெருக்களுக்கான சந்தை மதிப்பு வழிகாட்டியினை ஒரே நேரத்தில் பார்வையிட இயலவில்லை என பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பதிவுத்துறைக்கு வரப்பெற்றன. பொதுமக்களின் கோரிக்கைகள், மாநில அளவிலான சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பீட்டுக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு பொதுமக்களின் வசதிக்கேற்ப ஒரு குறிப்பிட்ட வருவாய் கிராமத்தின் அனைத்து புல எண்கள் மற்றும் அனைத்து தெருக்களுக்கான சந்தை மதிப்பு வழிகாட்டியினை, ஒரே நேரத்தில் எளிதில் பார்வையிட ஏதுவாக pdf வடிவத்தில் வருவாய் கிராமவாரியாக, பதிவுத்துறை இணையதளத்தில் (www.tnreginet.net) வெளியிட முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட மாநில அளவிலான சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பீட்டுக் குழுவால் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப, தற்போது பதிவுத்துறையின் இணையதளத்தில், (www.tnreginet.net) பொதுமக்கள் சம்பந்தப்பட்ட பதிவு மண்டலம், சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் வருவாய் கிராமம் ஆகியவற்றை தெரிவு செய்து, அந்த குறிப்பிட்ட வருவாய் கிராமத்தில் உள்ள அனைத்து புல எண்கள் (அல்லது) அனைத்து தெருக்களின் சந்தை வழிகாட்டி மதிப்புகளை pdf வடிவத்தில் எளிதில் பார்வையிடலாம்.

மேலும், அந்த விவரங்களைப் பதிவிறக்கம் செய்து தங்களது தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட சந்தை மதிப்பு வழிகாட்டியில், முரண்பாடுகள் ஏதும் இருப்பின்

பொதுமக்கள், அவ்விவரத்தினை தக்க ஆதாரங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளரிடம் எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, முரண்பாடுகள் ஏதும் இருப்பதாகக் கண்டறியப்பட்டால், நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அந்த முரண்பாடுகள் களையப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, பொது மக்கள் இந்த சேவையினைப் பயன்படுத்தி சந்தை மதிப்பு வழிகாட்டி குறித்த தங்களது குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**